இனிமையான குழந்தைகளே! சுகம், சாந்திக்கான மன ஆசைகளை பூர்த்தி செய்வதற்காக தந்தை வந்திருக்கின்றார். நீங்கள் அமைதியை விரும்புகின்றீர்கள் எனில் இந்த கர்மேந்திரியங்களிலிருந்து விடுபட்டு விடுங்கள். தனது சுயதர்மத்தில் நிலைத்திருங்கள்.

கேள்வி: பூஜ்ய நிலையடைவதற்கான முயற்சி என்ன? உங்களுக்கு ஏன் பூஜை செய்யப்படு கின்றது?

பதில்: பூஜ்ய நிலையடைவதற்காக உலகை தூய்மையாக்கும் சேவையில் உதவியாளர்களாக ஆகுங்கள். எந்த ஜீவாத்மாக்கள் தந்தைக்கு உதவி செய்கின்றார்களோ அவர்களுக்கு தந்தையின் கூடவே பூஜை நடைபெறும். குழந்தைகளாகிய உங்களுக்கு சிவபாபாவின் கூடவே சாலிகிராம் ரூபத்தில் பூஜைக் குரியவராகின்றீர்கள். பிறகு சாகாரத்தில் லெட்சுமி, நாராயணன் அல்லது தேவி தேவதை ரூபத்தில் பூஜை செய்யப்படுகின்றீர்கள். நீங்கள் பூஜ்ய மற்றும் பூஜாரிக்கான ரகசியங்களை அறிந்திருக்கின்றீர்கள்.

பாடல்: மாதா ஓ மாதா .........

ஓம் சாந்தி. தாய்மார்களை சௌபாக்கியசாலிகளாக ஆக்கக் கூடியவர் கண்டிப்பாக தந்தை மட்டுமே. மகிமையானது ஒருவருக்கு மட்டுமே பாடப்படுகின்றது. அனைவருக்கும் சத்கதி கொடுக்கும் வள்ளல் ஒரே ஒருவரே. நினைவும் அந்த ஒருவரையே செய்ய வேண்டும். இது குழந்தைகளாகிய உங்களது மகிமையாகும். நம்மை துர்பாக்கியசாலிகளிலிருந்து சௌபாக்கிய சாலிகளாக ஆக்கக் கூடியவர் தந்தையாவார். பாரதம் சௌபாக்கியசாலியாக இருந்தது. பிறகு பாரதம் 100 சதவிகிதம் துர்பாக்கியசாலியாக ஆகி விட்டது. பாரதத்தைப் பற்றிய கதைகள் உள்ளன. இந்த தாய்மார்களை பாக்கியசாலிகளாக ஆக்கக் கூடியவர் தந்தை யாவார். அவரை குழந்தைகளாகிய நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். அவரிடத்தில் உங்களது தொடர்பு இருக் கின்றது. இவையனைத்தும் அவரது படைப்புகள் என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். வேறு எந்த மனிதர்களும் படைப்பவர் மற்றும் படைப்பை பற்றி அறிந்திருக்கவில்லை. இந்த சித்திரங் கள் போன்றவற்றை உருவாக்கியது யார்? சிவபாபா என்று நீங்கள் கூறுவீர்கள். யார் மூலமாக? தாய் அல்லது சாகார பிதா மூலம் என்று நீங்கள் மீண்டும் கூறுவீர்கள். இப்பொழுது குழந்தை களாகிய உங்களது புத்தியில் முழு உலகம் என்ற மரம் இருக்கின்றது. உலகம் எவ்வளவு பெரியதாக இருக்கின்றது! வாஸ்கோடி காமா முழு உலகையே சுற்றி வந்தார். எங்கு பார்த்தாலும் கடலே கடல் தான், ஆகாயமே ஆகாயம் தான் இருந்தது. வேறு எதுவும் இல்லை. இவையனைத்தையும் நீங்கள் பள்ளியில் படித்திருப்பீர்கள். மீண்டும் தந்தை சுருக்கமாகப் புரிய வைக்கின்றார். பாரதம் 5000 ஆண்டுகளுக்கு முன்பு சத்யுகமாக இருந்தது என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். சத்யுகத்தில் பாரதம் மட்டுமே இருந்தது. பாரதத்திலும் மிகவும் குறைந்தவர்களே இருந்தனர். நாம் சூரியவம்ச இராஜ்யத்தைச் சார்ந்தவர்களாக இருந்தோம் என்று நீங்கள் இப்பொழுது கூறுவீர்கள். யமுனை நதிக்கரையில் கிருஷ்னரின் இராஜ்யம் இருந்தது என்று பாடப் பட்டிருக்கின்றது. டில்லியை பரிஸ்தான் (தேவலோகம்) என்று கூறப்படு கின்றது. முதன் முதலில் யாருடைய இராஜ்யமாவது இருந்திருக்க வேண்டும். நாம் சூரியவம்ச

இராஜ்யத்தைச் சார்ந்தவர்களாக இருந்தோம் என்று நீங்கள் கூறுவீர்கள். பிறகு தனித்தனியாக ஆகிவிடுகின்றீர்கள். ஆக எங்கு இராஜ்யம் செய்யப் படுகின்றதோ அதன் பிரபாவம் ஏற்படு கின்றது. பாரதத்தின் பிரபாவம் அதிகமாக இருக்கின்றது. இந்த அனைத்து விசயங்களும் உங்களது புத்தியில் சுற்றிக் கொண்டே இருக்க வேண்டும். தாரணை செய்ய வேண்டி யிருக்கின்றது.

சிவபாபாவை சோமநாதர், ஞானக்கடல் என்று அழைக்கின்றனர். சோமநாதர் என்ற பெயரை பூஜாரிகள் வைத்திருக்கின்றனர். உண்மையான பெயர் சிவபாபா. சிவன் என்று யாரை கூறப்படுகின்றது? ஆத்மாக்களின் தந்தையை. ஆத்மா பிந்துவாக இருக்கின்றது. பரம்பிதா பரமாத்மா என்று பாடப் பட்டிருக்கின்றது. ஆத்மா சிறியதாகவோ, பெரியதாகவோ ஆவதில்லை. தந்தை கூறுகின்றார் - நானும் இவர் சரீரத்தில் பிரவேசிக்கின்றேன் எனில் யாருக்கும் தெரிவ தில்லை. ஆனால் பிருகுட்டியின் நடுவில் நட்சத்திரத்தைப் போன்று ஜொலிக்கின்றது என்று நினைக்கின்றனர். அதனால் தான் நெற்றிமணி. நெற்றியில் மணி என்று கூறுகின்றனர். மணி என்று ஆத்மாவை கூறப்படுகின்றது. பாம்பின் நெற்றியிலும் மணியிருக்கும் என்று கூறப்படு கின்றது. இவையனைத்து விசயங்களும் உண்மையில் இந்த நேரத்திற்கான விசயங்களாகும். ஆத்மா என்ற மணியானது பிரகாசிக்கின்றது. அது பிருகுட்டியின் நடுவில் இருக்கின்றது. தந்தை உங்களுக்கு தினம் தினம் புதுப்புது விசயங்களைப் புரிய வைக்கின்றார். முக்கிய விசயம் என்னவெனில் - நான் சுயதரிசன சக்கரதாரியாக இருக்கின்றேன். தந்தை கூறுகின்றார் - பரம் ஆத்மா என்று அழைக்கப்படுகின்ற நான் பிறப்பு இறப்பற்றவனாக இருக்கின்றேன். நான் கண்டிப் பாக வருகின்றேன். நிரகாரத்திற்கு கோயில் உருவாக்கப்பட்டிருக்கின்றது. முன்பு இந்த ஞானம் இல்லை. கண்டிப்பாக நிராகார தந்தை வந்து ஏதாவது செய்திருக்க வேண்டும்! நிரகாரமானவர் வருவதே குடும்பத்தில் தான். லெட்சுமி நாராயணனின் ஆத்மாவும் வருகின்றது. அவருக்கும் சரீரத்தை காண்பிக்கின்றனர். லிங்க ரூபம் ஒரு சிவனுக்கு மட்டுமே காண்பிக்கின்றனர். சிவனின் கோயில்களில் சிவனின் கூடவே சாலிகிராமமும் இருக்கின்றது. கிருஷ்ணர் அல்லது லெட்சுமி நாராயணனின் கோயில்களில் சாலிகிராம் காண்பிப்பதில்லை. ஆக இவர்கள் அனைவரும் ஒரு தந்தையின் குழந்தைகள் என்பது நிரூபணம் ஆகின்றது. ஆத்மாவிற்கும் பூஜை ஏற்படுகின்றதெனில் தேவதைகளுக்கும் பூஜை ஏற்படுகின்றது. ருத்ர யக்ஞம் என்று கூறுகின்றனர் அல்லவா! ஜீவ ஆத்மாவின் மூலமாக தந்தை இந்த ருத்ர யக்ஞத்தைப் படைத்திருக்கின்றார். தந்தைக்கு எவ்வாறு பூஜை நடக்கின்றதோ அதே போன்று ஆத்மாக் களாகிய உங்களுக்கும் கண்டிப்பாக பூஜை நடைபெற வேண்டும். பிறகு சாகாரத்தில் லெட்சுமி நாராயணன் ஆகும் பொழுதும் பூஜை நடைபெறுகின்றது. அதே பெயர் வழங்கப்பட்டு வருகின்றது. இங்கு ஆத்மாக்களாகிய நீங்கள் இந்த சரீரத்தின் மூலமாக சேவை செய்து கொண்டிருக்கின்றீர்கள். ஆகையால் ஆத்மாக் களாகிய உங்களுக்கு பூஜை நடைபெறுகின்றது. சிவபாபா கூறுகின்றார் - நானும் இவர் மூலமாக மிக உயர்ந்த சேவையை செய்கின்றேன். ஆகையால் தான் முதன் முதலில் எனக்கு பூஜை நடைபெறுகின்றது. பிறகு எந்த ஆத்மாக்களின் மூலம் சேவை செய்கின்றேனோ, முழு உலகை தூய்மையாக்கு கின்றேனோ அவர்களுக்கும் கண்டிப்பாக பூஜை நடைபெற வேண்டும். அனைவருக்கும் பூஜை செய்கின்றனர். குறைந்தது லட்சம் சாலிகிராமத்தை உருவாக்குகின்றனர். சேட் போன்றவர்கள் ருத்ர யக்ஞத்தை உருவாக்கும் பொழுது சிலர் 5 ஆயிரம், சிலர் 10

ஆயிரம், சிலர் லட்சம் சாலிகிராம் உருவாக்கு கின்றனர். இது பரமாத்மா மற்றும் ஆத்மாக்களின் பூஜையாகும். தந்தை புரிய வைக்கின்றார் - ஆத்மாக்களாகிய நீங்கள் இந்த தூய்மை இல்லாத சரீரத்தின் மூலமாக சேவை செய்து கொண்டிருக்கின்றீர்கள். அனைவரைக் காட்டிலும் அதிக சேவை சிவபாபா செய்கின்றார், மேலும் உங்கள் மூலமாக செய்விக்கின்றார் எனும் பொழுது ஆத்மாக்களாகிய உங்களுக்கும் பூஜை நடைபெறு கின்றது. தந்தையின் கூடவே முதன் முதலில் உங்களது மகிமை வர வேண்டும். யாரும் அறிந்திருக்கவில்லை. ருத்ரனையோ, இராஜ்யத்தை அடைந்த சாலிகிராமத்தையோ யாரும் அறியவில்லை. இப்பொழுது நீங்கள் இராஜ்யத்தை அடைந்து கொண்டிருக்கின்றீர்கள். முக்கிய மானவர்களுக்கு மட்டுமே பூஜைகள் நடை பெறுகின்றன. அவர்கள் லெட்சுமி நாராயணனாக இருக்கின்றனர், அவர்களது இராஜ்யத்தின் புகழ் பாடப் பட்டிருக்கின்றது. அவர்களும் இந்த இராஜ்யத்தை யாரோ ஒருவரின் உதவியின் மூலமாக அடைந்திருப்பார்கள் அல்லவா! குழந்தைகளாகிய உங்களின் உதவியின் மூலமாக இராஜ்யம் ஸ்தாபனை ஆகின்றது. மிகவும் இனிமையான விசயமாகும். தாரணை செய்யுமளவிற்கு சுருக்கமாக தந்தை புரிய வைத்துக் கொண்டிருக்கின்றார். முக்கிய தாரணைக்கான விசயம் என்னவெனில் தந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள்.

உங்களது ஆத்மாவிலும் மரம் மற்றும் சக்கரத்தின் ஞானம் இருக்கின்றது. அனைவரையும் விட நம்பர் ஒன் பூஜையானது அனைத்து ஆத்மாக்களின் தந்தையாகிய சிவபாபாவிற்கு நடைபெறுகின்றது, அவர் அமர்ந்து உங்களையும் அவ்வாறு தகுதியுடையவர்களாக ஆக்கு கின்றார். ஆத்மாக்களாகிய உங்களுக்கு பூஜை நடைபெறுகின்றது. நாம் பூஜ்ய மற்றும் பூஜாரி களாக எவ்வாறு ஆகின்றோம் என்பதை இப்பொழுது புரிந்திருக் கின்றோம். பாரதவாசிகள் மட்டுமே பூஜ்ய மற்றும் பூஜாரிகளாக ஆகின்றனர். இப்பொழுது அனைவரும் பூஜாரிகளாக இருக்கின்றனர், பிறகு பூஜ்ய நிலையடைவார்கள். அங்கு யாரும் பூஜாரி பக்தர்கள் இருக்க மாட்டார்கள். அவர்களை பகவான் பகவதிகளாக கண்டிப்பாக பகவான் தான் ஆக்கியிருக்க வேண்டும். இப்பொழுது பகவான் நிராகாராக இருக்கின்றாரா? அல்லது சாகாராக இருக்கின்றாரா? சாகாரத்தில் உயர்ந்ததிலும் உயர்ந்தவர் லெட்சுமி நாராயணன் ஆவார். அவர்களை அவ்வாறு ஆக்கக் கூடியவர் நிராகாரமானவர், ஆகையால் தான் நிராகார மானவருக்கு பூஜை நடை பெறுகின்றது. இவையனைத்து விசயங்களும் குழந்தைகளுக்குப் புரிய வைக்கப்படுகின்றது. முதன் முதலில் தந்தையின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அவர் ஆத்மாக்களாகிய நம் அனைவரின் தந்தையாக இருக்கின்றார். ஏ, பகவான், ஏ பரம்பிதா என்று யாராவது கூறினால் நீங்கள் யாரை நினைத்தீர்கள்? நினைத்தது யார்? என்று கேளுங்கள். ஒரேயடியாக பிடிக்க வேண்டும். உங்களுக்கு எத்தனை தந்தைகள் உள்ளனர்? நீங்கள் யாரை அழைக்கின்றீர்கள்? பகவான் என்று யாரை கூறுகின்றீர்கள்? பரம்பிதா என்று கூறுகின்றனர். ஆக கண்டிப்பாக இரண்டு தந்தைகள் உள்ளனர். ஆத்மா இறை தந்தையை நினைவு செய்கின்றது. உங்களிடத்தில் ஆத்மாவும் இருக்கின்றது, சரீரமும் இருக்கின்றது. சரீரத்திற்கு லௌகீக தந்தை இருக்கின்றார். ஆத்மாவிற்கு தந்தை யார்? அவரையே பரம்பிதா பரமாத்மா என்று கூறுகின்றீர்கள். இவ்வாறு கூறியது யார்? மற்றும் யாரை அழைக்கின்றீர்கள்? அந்த எல்லையற்ற தந்தையின் அறிமுகத்தை கொடுக்க வேண்டும். அவரிடமிருந்தே ஆஸ்தி கிடைக்கின்றது. இவரும் அவரையே நினைவு

செய்கின்றார். வித விதமான மொழிகளில் வித விதமான பெயர்களை வைத்து விட்டனர். சிலர் இறைவன் (கடவுள்) என்று கூறுகின்றனர், சிலர் பரமாத்மா, சிலர் குதா என்று கூறுகின்றனர். அனைத்து தர்மத்தைச் சார்ந்தவர்களும் கண்டிப்பாக ஒருவரை மட்டுமே நினைவு செய் கின்றனர். அவர் அனைத்து ஆத்மாக்களின் தந்தையாக இருக்கின்றார். ஆஸ்தி தந்தையிட மிருந்து மட்டுமே கிடைக்கின்றது. ஆத்மாக்களாகிய நீங்கள் அவரை அழைக்கின்றீர்கள். இரண்டு தந்தைகளின் அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும் - எல்லைக்குட்பட்ட தந்தை மற்றும் எல்லையற்ற தந்தை. பக்தி மார்க்கத்தில் பக்தர்கள் பகவானை நினைக்கும் பொழுது பகவான் கூறுகின்றார் - நான் வருகின்றேன், வந்து உங்களுக்கு சுகம், சாந்தியை கொடுக்கின்றேன். பிறகு என்னை ஒருபொழுதும் நினைவு செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. ஆக பூஜ்ய - பூஜாரி, தூய்மை இல்லாமலும், தூய்மையாகவும் பாரதவாசிகளே ஆகின்றனர். மற்றபடி இடையில் மற்ற தர்மங்கள் ஸ்தாபனை ஆகின்றன. பிறகு வளர்ச்சியடைந்து அடைந்து கடைசியில் அவை களும் தமோ பிரதானமாக ஆகிவிடுகின்றன. கடைசியில் முழு மரமும் வந்து விடும். அங்கு காலியாகும் பொழுது தான் திரும்பிச் செல்வீர்கள். ஆக இப்பொழுது தூய்மையில்லாத உலகமாக இருக்கின்றது. பதீத பாவன ...... என்று பாடுகின்றனர் எனில் கண்டிப்பாக தூய்மை இல்லாதவர்கள் அல்லவா! பாரதம் தூய்மையாக இருந்தது. இப்பொழுது தூய்மை இழந்து இருக்கின்றது. சிவபாபா கண்டிப்பாக வருகின்றார், ஆனால் எப்பொழுது வந்தார், எப்படி வந்தார் .... என்பதை மறந்து விட்டனர். நான் சரீரத்தை தாரணை செய்து உங்களுக்குப் புரிய வைக்கின்றேன் என்று கிருஷ்ணர் கூறுவது கிடையாது. நான் இந்த சரீரத்தின் மூலமாக உங்களுக்குப் புரிய வைக்கின்றேன் என்று நிராகார தந்தை புரிய வைக்கின்றாரெனில் அவர் அனைவரிலிருந்தும் தனிப்பட்டவராகி விடுகின்றார். கிருஷ்ணரை நீங்கள் சுயம் பகவான் என்று ஏற்றுக் கொள்கின்றீர்கள். இவர் கூறுகின்றார் - நான் சாதாரண வயோதிக சரீரத்தில் பிரவேசிக் கின்றேன். தந்தை கூறுகின்றார் - நான் உங்களது பிறப்புகளைப் பற்றி அறிந்திருக்கின்றேன். சிவபாபா இவரது உடலில் பிரவேசிக்கின்றார். கிருஷ்ணரை பகவான், பதீத பாவன், ஞானக் கடல் என்று கூற முடியாது. கீதையை கையில் எடுத்தாலும் பதீத பாவனாக அனைத்து சீதை களுக்கும் இராமராக இருக்கக் கூடியவர் என்று கூறுகின்றனரே தவிர ராதையின் கிருஷ்ணர் என்று கூறுவதில்லை.

இராம் என்றால் பரம்பிதா பரமாத்மா. திரேதா இராமர் என்று கூறினால் அவரை விட உயர்ந்தவர் லெட்சுமி நாராயணன் இருக்கின்றனர். பிறகு அவரது பெயரை ஏன் பயன்படுத்து வதில்லை? இது பரமாத்மாவிற்கான விசயமாகும். சொர்க்கத்தை ஸ்தாபனை செய்யக் கூடியவர் என்று நிராகாரமானவரையே கூற முடியும். விடுவிக்கக் கூடியவர், வழிகாட்டி என்று தந்தையை மட்டுமே கூற முடியும். கிறிஸ்து அனைவரையும் விடுவிக்க முடியாது. யாருடைய பெயரையும் பயன்படுத்த முடியாது. தந்தை வந்து துக்கத்திலிருந்து விடுவிக்கின்றார். அவரே பிறகு வழிகாட்டியாக ஆகின்றார். நான் உங்களுக்கு வழி காண்பிக்கின்றேன் என்று கூறு கின்றார். உங்களை தந்தை வந்து தன்னுடையவர்களாக ஆக்கியிருக்கின்றார். இது உங்களுடைய ஈஸ்வரிய பிறப்பாகும். உங்களுக்கு சிவபாபா விடமிருந்து சக்தி கிடைக்கின்றது. உங்களுடையது அமைதி சக்தியாகும். அவர்களுடையது அறிவியல் சக்தியாகும். அவர்கள் புத்தியினால் காரியம் செய்கின்றனர். அதனையே

(சயின்ஸ்) அறிவியல் கர்வம் என்று கூறப் படுகின்றது. அதன் மூலம் விநாசம் செய்கின்றனர். அறிவியல் சுகமும் அதிகமாக கொடுக் கின்றது. பிறகு விநாசமும் செய்து விடுகின்றது. உங்களுக்கு அங்கு விமானம் போன்ற அனைத்தும் இருக்கும். கலைகள் இருக்குமல்லவா! இவையனைத்து பொருட்களும் உங்களுக்கு பிறகு காரியத்திற்குப் பயன்படும். அயல்நாடுகளில் வெளிச்சம் மட்டும் தெரிந்து, விளக்கே தெரியாத வண்ணம் விளக்குகளை தயாரித்து இருக்கின்றனர். சத்யுகத்திலும் இவ்வாறு வெளிச்சம் இருக்கும். இங்கிருக்கும் பொருட்கள் அங்கும் இருக்கும். நீங்கள் சாட்சாத்கார் செய்திருக்கின்றீர்கள். அங்கு விபத்து போன்ற விசயங்கள் இருக்காது. துக்கத்திற்கான விசயம் இருக்காது. தந்தை வந்து உங்களது சுகம் மற்றும் சாந்திக்கான மன ஆசைகளை பூர்த்தி செய்கின்றார்.

மனிதர்கள் அமைதிக்காக அலைகின்றனர். உங்களை அசாந்தியாக ஆக்கியது யார்? என்று அவர் களிடத்தில் கேளுங்கள். இதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். அசாந்தியாக ஆக்குவது இந்த 5 விகாரங்கள் ஆகும். ஆனால் இதனை புரிந்துக் கொள்வதில்லை, இதனை மறந்து விட்டனர். ஆத்மா சாந்தி சொரூபமாக இருக்கின்றது. ஏ, ஆத்மா, நீ வந்திருப்பது அமைதியான தேசத்திலிருந்து, பிறகு கர்மேந்திரியங்களை எடுக்கின்றீர்கள். இப்பொழுது நீங்கள் இதனிட மிருந்து தனிப்பட்டு விடுங்கள். விடுபட்டு விடுங்கள். இதில் வேறு எந்த பிரணாயாமம் செய்வ தற்கான விசயமில்லை. எவ்வளவு காலம் குகையில் அமர்ந்திருப்பார்கள்? ஆத்மா கூறுகின்றது - நான் இந்த கர்மேந்திரியங்களிலிருந்து விடுபட்டு விடுகின்றேன், ஏனெனில் நான் களைப்படைந்து விட்டேன். இப்பொழுது இந்த சரீரத்தை மறந்து விடுகின்றேன். இப்பொழுது தந்தை கூறுகின்றார் - நீங்கள் தங்களது சுயதர்மம் மற்றும் சுய தேசத்தை நினைவு செய்யுங்கள். உண்மையில் நீங்கள் அங்கு இருக்கக் கூடியவர்கள். தங்களது வீட்டை நினைவு செய்யுங்கள். செயல்கள் செய்தே ஆக வேண்டும். செயல்கள் இல்லாமல் இருக்க முடியாது. நாம் நமது கைகளினால் உணவு சமைப்பதில்லை என்று அவர்கள் நினைக்கின்றனர். அதனால் தான் கர்ம சந்நியாசி என்ற பெயர் உள்ளது. ஆனால் கர்ம சந்நியாசம் செய்ய முடியாது. அவர்களது தர்மமே அவ்வாறு இருக் கின்றது. குடும்பஸ்தர்களிடத்தில் அவர்கள் சாப்பிட வேண்டியிருக்கின்றது. ஆகையால் தான் குடும்பஸ்தர்களிடத்தில் பிறப்பெடுத்து துறவற மார்கத்தில் செல்ல வேண்டியிருக்கின்றது. ஏனெனில் பாரதத்ததை தூய்மையாக்க வேண்டும். பாரத்தத்தில் தான் தூய்மை இருந்தது. அனைவரும் தூய்மையாக இருந்தனர். இப்பொழுது அனைவரும் தூய்மையின்றி இருக்கின்றனர். தந்தை அமர்ந்து இந்த ரகசியங்களைப் புரிய வைக்கின்றார். பிறகு கூறுகின்றார் - குழந்தைகளே! வேறு எதுவும் செய்யாதீர்கள், என் ஒருவனை மட்டும் நினைவு செய்தால் உங்களது விகர்மங்கள் விநாசம் ஆகிவிடும், நீங்கள் என்னிடத்தில் வந்து விடுவீர்கள். நாடகம் முடிவடைய வேண்டும். சதோ, ரஜோ, தமோவை கடந்து இப்பொழுது அனைவரும் திரும்பிச் செல்ல வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிய செல்லமான குழந்தைகளுக்கு ஆன்மீக தாய், தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீக குழந்தைகளுக்கு ஆன்மீக தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) தன்னை இந்த சரீரத்தில் நெற்றியின் நடுவில் பிரகாசிக்கக் கூடிய மணி என்று நினைக்க வேண்டும். சுயதரிசன சக்கரதாரியாக ஆக வேண்டும்.

2) தனது சுயதர்மம் மற்றும் சுய தேசத்தை நினைவு செய்து அமைதியின் அனுபவம் செய்ய வேண்டும். புத்தியை அலைபாய விடக் கூடாது. இந்த சரீரத்திலிருந்து விடுபட்டு இருக்கும் பயிற்சி செய்ய வேண்டும்.

வரதானம் : ஒவ்வொருவருக்கும் அன்பு மற்றும் சக்தியின் பாலனை கொடுக்கக்கூடிய அன்பு என்ற பொக்கிஷத்தால் நிரம்பியவர் ஆகுக.

எந்தக் குழந்தைகள் எந்தளவு அனைவருக்கும் தந்தையின் அன்பை கொடுக்கின்றார் களோ, அந்தளவு இன்னும் அதிகமாக அன்பு என்ற பொக்கிஷம் நிறைந்து கொண்டே இருக்கும். ஒவ்வொரு சமயமும் அன்பின் மழை பொழிந்து கொண்டிருப்பதாக அனுபவம் ஆகும். ஒரு அடியில் அன்பு கொடுங்கள், மேலும், அடிக்கடி அன்பைப் பெறுங்கள். இந்த சமயம் அனைவருக்கும் அன்பு மற்றும் சக்தி தேவை. எனவே, சிலருக்கு தந்தை மூலம் அன்பு கிடைக்கச் செய்யுங்கள், சிலருக்கு சக்தி... இதன் மூலம் அவர்களுடைய ஊக்கம், உற்சாகம் சதா இருந்து கொண்டே இருக்கும் - இதுவே விசேஷ ஆத்மாக்களின் விசேஷ சேவை ஆகும்.

சுலோகன்: யார் மாயாவி சாமர்த்தியத்தில் இருந்து கடந்து இருக்கின்றார்களோ, அவர்களே தந்தைக்கு மிகவும் பிரியமானவர்கள் ஆவார்கள்.